Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 27 | 10-04-2003 | வியாழக்கிழமை | ஓசை 51

அறிவன் ஒப்செற் பதிப்பகம்

வன்னி மண்ணில் உங்கள் சகல விதமான அச்சுப் பதிப்புக்களையும்

■ தரமான முறையில்
■ கணினி முறையில்
■ குறித்த தவணையில்

செய்து கொள்ள வேண்டிய ஒரே பதிப்பகம்.

யாழ். சாலை, கிளிநொச்சி.



போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு - விடுதலைப்புலிகள் நேற்றைய சந்திப்பின் போது...

# கடற் பிராந்தியத்தில் அத்துமீறல்களைத் தவிர்த்தல்

# விடுதலைப்புலிகள் - கண்காணிப்புக்குழு நேற்று பேச்சு!

## புதிய ஒழுங்குமுறை குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

**கடற்பிராந்தியத்தில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அத்துமீறல் சம்பவங்கள் மற்றும் யுத்தநிறுத்தமிறல் சம்பவங்கள் போன்றவைகள் மேலும் நடைபெறாது தவிர்ப்பது குறித்தும், கடற் பிராந்தியத்திற்கென புதிய ஒழுங்குமுறையொன்றை உருவாக்குவது தொடர்பாகவும் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையிலான குழுவினருக்கும், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் குழுவினருக்கும் இடையில் கிளிநொச்சியில் நடந்த சந்திப்பின்போது ஆராயப்பட்டது.**

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் தலைமையிலான குழுவினருக்கும் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமை யிலான குழுவினருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது இவ் விடயம் ஆராயப்பட்டது.

கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பித்த இச்சந்திப்பு இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றது.

கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன்,

(08ஆம் பக்கம் பார்க்க)

## தரைப்பகுதிபோல் கடற்பரப்பிலும் எமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் உள்ளன!

### கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து

தரைப்பகுதி போல் கடற்பரப்பிலும் எமக்குச் சொந்தமான எமது கட்டுப்பாட்டுப் பகுதிகள் உள்ளன என்பதை கண்காணிப்புக் குழுவினருடனான நேற்றைய சந்திப்பில் வலியுறுத்திக் கூறினோம் என தமிழீழஅரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

நேற்றுப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருடனான சந்திப்பின் பின் செய்தியாளரிடம் பேசிய அவர், அண்மைக்காலத்தில் கடலில் ஏற்பட்ட அத்துமீறல் சம்பவங்கள் மற்றும் மோசமான நடவடிக்கைகள், வரும் காலங்களில் நடைபெறாதவாறு ஒரு புதிய ஒழுங்குமுறையைக் கொண் டுவர வேண்டும் என்பது சம்பந்த மாகக் கலந்துரையாடினோம் எனவும் தெரிவித்தார்.

மேலும், யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கடல் நடவடிக்கைகள், கடல்சார் செயற்பாடுகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா விமானப்படையினருக்கு அமெ.பயிற்சியும் தொழில்நுட்பமும்

சிறிலங்கா விமானப்படையினருக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கப் படையினர் முன்வந்துள்ளனர். சிறிலங்காவிற்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா திரும்பியுள்ள ஆசிய பசுபிக் வலய நாடுகளுக்கான அமெரிக்க விமானப்படையின் பிரதம கட்டளைத் தளபதி ஜெனரல் வில்லியம்ஸ் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மற்றும் கட்டுநாயக்கா விமானப்படைத்தளங்களுக்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள தொழில் நுட்ப சேவைகளை பார்வையிட்டுள்ளார்.

இதனையடுத்து இந்த இரண்டு இடங்களிலும் நடைபெறும் பயிற்சி மற்றும் தொழில்நட்ப நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் உறுதிமொழியை சிறிலங்கா விமானப் படை அதிகாரிகளிடம் அவர் தெரிவித்துள்ளார்.

### ச.தே.நி.அமைப்புக்களின் பிரதிநிதிகள்

## தமிழ்ச்செல்வனை இன்று கிளிநொச்சியில் சந்திப்பர்!

சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

உலக வங்கியில் இலங்கைக்கான அதிகாரி பீற்றர் கெறால்ட், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன்கூனி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட அதிகாரி மிக்கேல் பேமியா ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப்பணியகத்தில் நடைபெறும். இச்சந்திப்பில் 'சிரான்' அமைப்பின் பணிகள், உலக நிதியை கையாளுதல் மற்றும் சிறுவர் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். நகரில் புதிய முகாம் அமைத்தல் நேற்றைய பேச்சுக்களில் முடிவில்லை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் சிறிலங்கா ராணுவத்தினர் முகாம் அமைப்பது தொடர்பான சர்ச்சையை அடுத்து இது தொடர்பாக ஆராய்வதற்கான பாதுகாப்பு அமைச்சின் உதவிச் செயலாளர் கரலியத்த தலைமையிலான குழுவிற்கும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்பு எதுவித முடிவுகளுமின்றி நிறைவு பெற்றுள்ளது.

கல்லுண்டாய் வெளியில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் யாழ். மாவட்ட ராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கும் இடையில் இது தொடர்பாக வாக்குவாதம் இடம் பெற்றதாகவும் இதன்போது சரத் பொன்சேகா,

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளின் முதல் சிறப்புப்படையணி தனது 12வது அகவையைப் பூர்த்தி செய்கிறது

விடுதலைப் புலிகளின் முதலாவது சிறப்புப் படையணியும் .முன்னணித் தாக்குதல் படையணியுமான "சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி" இன்று தனது 12 வருட வரலாற்றைப் பூர்த்திசெய்துள்ளது.

பல நெருப்பாறுகளைக் கடந்து வந்த தமிழரின் விடுதலைப் போர் வரலாற்றில் முக்கிய பதிவுகளை நிகழ்த்திய இப்படையணியின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு தொடர்பாக அப்படையணியினால் செய்திக் குறிப்பொன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

"1991, ஏப்ரல் பத்தாம் நாள் எமது தலைவர் அவர்களால் தொடக்கிவைக்கப்பட்ட தமிழ்மக்களின் விடுதலைக்கான முதலாவது சிறப்புப் படையணி இன்று பன்னிரண்டு ஆண்டுகளைக் கடந்து நிற்கின்றது. "வன்னி விக்கிரம" என்ற பெயரிலான எதிரியின் பாரிய படைநடவடிக்கை முதல் மூன்றாம் ஈழப் போரின் முடிவுச் சமரான "தீச்சுவாலை" நடவடிக்கை வரையான முறியடிப்புச் சமர்களில் எதிரிக்கு சிம்மசொப்பனமாக விளங்கியது எமது படையணி. அத்தோடு "ஆ.க.வெ" என்ற எமது முதலாவது பாரிய நடவடிக்கை முதல் "ஓயாத அலைகள்-4" வரையுமான எமது தலைவரின் திட்டமிடல்களை வெற்றிகரமாக முன்னெடுத்து எமது வரலாற்றிற்குப் பல வெற்றி

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பாலசிங்கம் ரவிகுலசிங்கம் என் பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அறிமுக அட்டையும், சிறிய போர்சுடன் கிளிநொச்சிப் பகுதியில் தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (3073)

### தவறிவிட்டது

புவனேந்திரன் ஆகிய நான் முல்லைத்தீவில் இருந்து கிளிநொச்சிக்கு உழவு இயந்திரத்தில் பயணம் செய்யும் போது முக்கிய மான ஆவணங்களுடன் சூட்கேசும், உரப்பை ஒன்றும் தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (3071)


- ஜப்பான் உதவி வழங்கும் மாநாடு -

# இல.யின் தேவை குறித்த திட்டத்தினை தயாரிக்கும் நிலையில் அரசாங்கம்!

(கொழும்பு)

ஜப்பா ல் நடைபெறவுள்ள இலங்கைக் உதவி வழங்கும் மாநாடு தெ ர்பாக முழுமையான பொதியைத் தயாரிக்கும் தறுவாயில் அரசாங்கம் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கை அபிவிருத்திசெய்ய சர்வதேச சமூகத்திடமிருந்து எத்தகைய உதவிகள் கிடைக்கவேண்டும் என்பதை விளக்குவதற்கான மதிப்பீட்டு அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தயாரிக்கும் பணியை ஐ.நா.சபை, சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அமைப்புக்கள் மேற்கொண்டிருந்தன. அறிக்கையின் நகல் விடுதலைப் புலிகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆராய்ந்து வறுமை ஒழிப்பு மூலோபாயங்களுக்கான இறுதி ஆவணத்தை வரையப் போவதாக அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல் என்று இந்த ஆவணம் அறியப்படுகிறது. முழு நாட்டிலும் எத்தகைய கொள்கைகளுக்கு தேசிய ரீதியான முன்னுரிமை வழங்கமுடியும் என்பதை அதுபட்டியலிடுகிறது.

டோக்கியோ நன்கொடை மாநாடு எதிர்வரும் யூன் மாதம் நடைபெறவுள்ளது.

அடுத்த நான்கு முதல் ஆறு ஆண்டுகளுக்கான திட்ட மதிப்பீடுகளை சமர்ப்பிக்க இது சிறந்த வாய்ப்பாக அமைகிறது.

குறுகிய காலத் தேவைகள் முழுமையான அபிவிருத்தி இலக்குகள் என்பவற்றிற்கிடையிலான சமநிலையைப் பேணும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

# வித்தியா விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது

முல்லைத்தீவு மாவட்ட கரைத்துறைப்பற்று பிரதேச செயலக விளையாட்டுப்போட்டி அண்மையில் முல்லைத்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வ.வனிதன் ஏற்றிவைக்க, பிரதேசக் கொடியினை பிரதேச செயலாளர் காசிப்பிள்ளை ஏற்றி வைத்து போட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். மிகவும் எளிமையான முறையில் நடாத்தப்பட்ட இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீடம் கிருஸ்ணபிள்ளை கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இவ் விளையாட்டுவிழா நிகழ்வில் தண்ணீருற்று வித்தியா விளையாட்டுக்கழகம் 130 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக்கழகம் 121 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும், மாமூலை விண்ணொளி விளையாட்டுக்கழகம் 40 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தினையும் தமதாக்கிக் கொண்டன. விளையாட்டு உத்தியோகத்தர் ச.குமாரின் நன்றியுரையுடன் போட்டி நிறைவு பெற்றது. (சோ.லோ)

# மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்க

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி கே. சுஜந்தன் அவர்களால் பின்வரும் பாடசாலை மாணவர்களுக்கான கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பார்வைக்குறைபாடு உள்ளதாக இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குறைபாடுகளையுடையவர்கள் என இனங் காணப்பட்ட மாணவர்கள் கீழ்க் குறிப்பிட்ட அந்தந்தப் பாடசாலைகளில் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

தருமபுரம் மகாவித்தியாலயம் -16, முரசுமோட்டை முருகானந்தா ம.வி - 04, முரசுமோட்டை அ.த.க - 01, இராமநாதபுரம் மகா வித்தியாலயம் - 14, கிளிநொச்சி மகா வித்தியாலயம் - 10, ஆனையிறவு அ.த.க. - 01, புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வர வித்தியாலயம் - 02, உருத்திரபுரம் மகாவித்தியாலயம் - 17, கிளிநொச்சி மத்திய கல்லூரி - 18. (சோ. லோ)

# கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை புதிய கட்டடம் திறப்பு விழா

கனகாம்பிகைக்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா நேற்றுக் காலை 10.00 மணிக்கு பாடசாலை முதல்வர் திருமதி [illegible] தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி வலய பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் பத்மநாதன், வன்னிக் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்கள் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியினை பாடசாலை அதிபர் ஏற்றி வைத்தார். பாடசாலைக் காரியாலயத்தினை பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் அவர்களும் பாடசாலை மண்டபத்தினை திருமதி பொன். தியாகம் அவர்களும் சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்துவைத்தனர். தொடர்ந்து பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிறப்புரையினை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யுனிசெப நிறுவன மல்லாவி வதிவிட பிரதிநிதி பென்னிபுறூன் அவர்களும், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாம் அவர்களும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் அவர்களும் பாடசாலை அபிவிருத்திக்குழுச் சார்பில் பசுபதி ஆகியோர் சிறப்புரை வழங்கினர். தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (சோ.லோ)


## ஒன்று கூடல்

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை, முறைசாராக் கல்விப்பிரிவு கிளி/மத்திய கல்லூரியில் நடைமுறைப்படுத்தும்,

**கனரக வாகன ஓட்டுனர் பயிற்சி நெறி-38-A**

வகுப்புகளுக்கு 02-04-2003 ஈழநாதம் விளம்பரத்திற்கமைவாக விண்ணப்பித்தவர்கள் அனைவரும் 12-04-2003 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் தயவுசெய்து ஒன்று கூடவும்.

**அதிபர்,**
**கிளி/மத்திய கல்லூரி**

(சி-8065)



## MSF- HOLLAND

## வேலை வாய்ப்பு

புதுக்குடியிருப்பைத் தளமாகக்கொண்டு இயங்கும் **MSF- HOLLAND** நிறுவனமானது பின்வரும் வெற்றிடங்களுக்கு உங்கள் விண்ணப்பங்களை நாடுகின்றது.

**1. SECURITY GUARD (Relief)- 01**

தகைமைகள்:-

- சிறிதளவு ஆங்கில அறிவு.
- 60 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.
- சிறந்த உடலாரோக்கியம் உள்ளவராக இருக்கவேண்டும்.

**2. CLEANER (Relief)-01 & COOK (Relief) - 01**

தகைமைகள்:-

- சிறிதளவு ஆங்கில அறிவு.
- 60 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.
- சிறந்த உடலாரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- நன்றாக உணவு சமைக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு 19.04.2003 மாலை 5.00 மணிக்கு முன்னதாக,**

**The Administrator,**
**MSF-Holland,**
**Puthukkudiyiruppu.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படட வேண்டும்.

புதுக்குடியிருப்பு எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்.

(2828) **நிர்வாகி**


# நிர்வாகம் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு ஒன்று கிளிநொச்சித் தமிழர் புனர்வாழ்வு நிறுவன மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பங்காளி நிறுவனமாகிய மாவட்ட மட்ட உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனமாக கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவில் தலைவராக செல்வி.பு.கனகசபை, செயலாளராக திருமதி. சி.சோமசுந்தரம், பொருளாளராக திருமதி. சி.மகேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாக சபையின் ஆலோசகர்களாக சதாதனபாலசிங்கம், ஆனைவிழுந்தான் கிராம அலுவலர் வேளமாலிகிதன், ஏ.வி.கே.மாணிக்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்

புதுவருடத்தினை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கியின் சகல கிளைகளிலும் ஏப்ரல் 14ம் நாள் பி.பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என கிராமிய அபிவிருத்தி வங்கியினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விவசாயக்குழுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு செயலகத்தில் நடைபெறுமென கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார். (சோ.லோ)


தமிழீழ மாணவர் அமைப்பின்

## பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு

க.பொ.த. உயர்தரம் 2003 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான 'நாடகமும் அரங்கியலும்' வதிவிட வழிகாட்டல் கருத்தமர்வு (உணவு, தங்குமிட வசதி செய்யப்பட்டுள்ளது)

இடம்:- தமிழீழ மாணவர் அமைப்பு, நடுவப்பணியகம், பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி(ஈழநாதம் பணிமனை முன்வீதி)

காலம்:- 11.04.2003 வெள்ளி பி.ப 1.00 மணி தொடக்கம் 12.04.2003 சனி பி.ப3.30 மணிவரை.

ஆசிரியர்கள் (1) கலாநிதி சிதம்பரநாதன் (யாழ்.பல்கலை. சிரேஷ்ட விரிவுரையாளர்.

(11) திரு.விந்தன் அவர்கள்

மேற்படி பாடத்தில் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-8063) தமிழீழ மாணவர் அமைப்பு



## மூன்றாம் ஆண்டு நினைவில்

தாய் மடியில்: 04 * 05 * 1982

கல்லறையில்: 10 * 04 * 2000



**வீரவேங்கை பவான் / செந்தூரா**

**(தியாகராசா ஜெகனீஸ்ரா)**

9ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

"ஓயாத அலை மூன்றில் ஓயாது சமர்செய்து
ஆனையிறவு வெற்றிக்கு வழிவகுத்த
சரித்திரம் படைத்தாயம்மா....
துயிலகத்தில் நிம்மதியாய் நீ உறங்கு.
மூன்று வருடமென்ன ஜீவிதம் உள்ளவரை
வாழுவாய் செந்தூராவே"

த.முகவரி:
மந்துவில்,
புதுக்குடியிருப்பு.

பெற்றோர்,
சகோதரர்கள், உறவினர்கள்.

(2829)

# ஈராக்கின் மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஐ.நா.விற்கு முக்கிய பங்கு இருக்கிறது!

## – புஷ், பிளேயர் கூட்டாக வலியுறுத்து

**ஈராக்கை மறுசீரமைக்கும் பணியில் ஐ.நா. முக்கிய பணியாற்ற வேண்டும் என்று அமெரிக்க சனாதிபதியும் பிரிட்டிஷ்பிரதம மந்திரியும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.**

வெல்பாஸ்டில் தங்களது உச்சி மாநாட்டுக்கு பின் இரு தலைவர்களும் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டனர்.

ஈராக்கிய மக்களுக்கு உடனடி உதவி வழங்குவதில் ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் தனியார் அமைப்புக்களின் முயற்சிகளை அமெரிக்க சனாதிபதியும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் பாராட்டியுள்ளனர்.


ஈராக்கில் போருக்குப் பிந்திய நிர்வாகத்தை ஆதரிக்கவும், ஈராக்கின் பிரதேச ஒருமைப்பாட்டை பராமரிக்கவும் ஐ.நா. பாதுகாப்பு சபையின் புதிய தீர்மானங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

ஐ.நா.தலைமைச் செயலருக்கு ஈராக்குறித்த சிறப்பு ஆலோசகர் நியமிக்கப்படுவதையும் அவர்கள் வரவேற்றனர்.

போருக்கு பின்னான ஈராக்கில் அந்த நாட்டு மக்களின் ஆதரவிலான இடைக்கால அரசை ஏற்படுத்துவதை தாங்கள் ஆதரிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று ஐரோப்பிய யூனியனும் ஐ.நா வை வலியுறுத்தியுள்ளது. ஐரோப்பிய யூனியன் வெளியுறவுக் கொள்கைத் தலைவர் ஜேவியர் சொலானா ஐ.நா.பொதுச் செயலர் கொபி. அனானை நியூயோர்க்கில் சந்தித்துப் பேசினார்.

ஈராக்கில் போருக்குப் பின் அமையும் அரசை நடத்துவதில் ஐ.நா. சபை மிகவும் முக்கியமான பங்கு வகிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



அமெரிக்க ஏ-10 விமானம் ஈராக்கியரின் ஏவுகணைத் தாக்குதலுக்குத் தப்ப திசையை மாற்றி தலைகீழாகப் பறக்கிறது.



சதாமுக்கு எதிரான அணியினர் நாஜாப்பிலுள்ள தமது செயலகத்தில் தங்கியுள்ளனர்

## ஊடகவியலாளர் கண்டனம்

அமெரிக்கா, ஊடகவியலாளர்கள் தங்கும் இடங்களைநோக்கித் தாக்குதலை நடத்துவதாக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது ஜெனீவா சாசனத்திற்கு விரோதமான செயல் என்றும் அந்த அமைப்பு தனது குற்றச்சாட்டில் மேலும் தெரிவித்துள்ளது.

## மீள அழைக்க முடிவு

அல்ஜெசீரா தொலைக்காட்சி நிறுவனம் தனது ஊழியர்களை ஈராக்கில் இருந்து மீள அழைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அத்தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

அமெரிக்கப்படையினரின் தாக்குதலில் இத்தொலைக்காட்சி நிறுவனத்தில் ஒளிப்பதிவாளர் ஒருவர் பலியானதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமெரிக்காவின் விமானத் தாக்குதல் காரணமாக மூன்று ஊடகவியலாளர்கள் பலியாகி உள்ளமை தெரிந்ததே.

## அசாமில் பூமி அதிர்ச்சி

(புதுடில்லி)

இந்திய அசாம் மாநிலத்தில் நேற்று முன்தினம் இரவு பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்திய நேரப்படி இரவு 10.25 மணியளவில் ஏற்பட்ட இந்த பூமியதிர்ச்சி 4.3 என ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது.

## இஸ்ரேலியத் தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் பலி!

இஸ்ரேலியப் படையினரின் விமானத் தாக்குதலில் ஐந்து பலஸ்தீனர்கள் பலியாகியுள்ளனர். மேலும் 47பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காஸாப் பகுதியில் உள்ள செயிற்டோன் பகுதியிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையில் இருந்து வரும் முறுகல் நிலையைத் தீர்ப்பதற்கான ஆலோசனையை அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வழங்கிய சில மணித்தியாலங்களிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



அம்குவைசர் என்னும் இடத்தில் அவுஸ்திரேலிய கண்காணிப்பு அணி

## - ஈராக்கிலுள்ள புனிதச் சின்னங்களை -
## காப்பாற்ற அனுமதிக்குமாறு ஈரான் மாணவர் கோரிக்கை

கார்பலாவிலும் நஜாவ் எனும் இடத்திலும் உள்ள முஸ்லிம்களின் புனிதச் சின்னங்களைப் பாதுகாக்கத் தம்மை அனுமதிக்க வேண்டும் என ஈரானிய மாணவர்கள் ஈரானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஈரானிய உயர் தலைவர் ஆயத்துல்லா அலி கொமய்னி இதற்குத் தம்மை அனுமதிக்க வேண்டுமெனக் கோரியுள்ளார்.

அத்துடன், அப்புனிதச் சின்னங்களைச் சேதப்படுத்தக் கூடாது என அவர்கள் அமெரிக்க, பிரித் தானிய படைகளுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர்.

மேலும் அம்மாணவர்கள் தங்கள் முஸ்லிம் சகோதர சகோதரிகளின் உடல்களை எடுத்துத் தகனம் செய்ய அனுமதிக்குமாறும் வேண்டியுள்ளனர். உலகில் வாழும் முஸ்லிம்கள் ஈராக்கின் புனிதச் சின்னங்கள் அழிக்கப் படுவதையும் ஈராக்கிய மக்கள் கொல்லப்படுவதையும் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார் கள் என அம்மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வேட்பாளருக்குப் புதியதடை

(புதுடில்லி)

இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட தடைத் விதிக்கும் அரசியல் சட்டப் பிரேரணையை அனைத்துக் கட்சிக ளிடையே கருத்தொருமை ஏற்படும் பட்சத்தில் பாராளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரத் தயார் என்று இந்திய மத்திய அரசு கூறியுள்ளது.

இந்தப் பிரேரணை மாநிலங்கள் அவையில் ஏற்கனவே 1992இல் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் படாமல் உள்ளது குறிப்பிடத் தக்கது.

இது குறித்து நேற்று மக்களவையில் பிரஸ்தாபிக்கப்பட்ட போது மேற்கண்ட முடிவு குறித்து மத்திய அரசின் சுகாதாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் நாட்டில் பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை

## - முதல்வர் ஜெயலலிதா கூறுகிறார்

(சென்னை)


தமிழ் நாட்டில் பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா விளக்கம் அளித்துள்ளார்.

சட்டப் பேரவையில் நேற்றுப் பேசிய பா.ம.க. தலைவர் ஜி.கே. மணி அண்மையில் தருமபுரியில் நக்ஸலைட்டுக்களுக்கு எதிரான தேடுதல் வேட்டையில் கைதான பிரபாகரன், ஆனந்தகுமார் இருவரும் 18 வயதுக்கு குறைவானவர்கள் என்றும் அவர்கள் மீது பொடோ சட்டம் தவறாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்குக் குறுக்கிட்டு பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா இந்த இரண்டு பேரும் பல சந்தர்ப்பங்கள் இருந்த போதும் தங்கள் வயதினைக் குறிப்பிடவில்லை என்று தெளிவு படுத்தியுள்ளதுடன், பிரபாகரன் ஜாமினில் விடுதலையாகியுள்ளார் என்றும் அதை எதிர்த்து அரசு மேன்முறையீடு செய்யவில்லை. அதனால் பொடோ தவறாக பயன் படுத்தப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.





ஈராக்கிய குர்திஸ்[illegible] படையினர்



பாக்தாத்தில் டாங்கிகளுடன் முன்னேறும் அமெரிக்க தரையிறங்கும் படையினர்

# புதிய திருப்பங்களுடன் அயோத்தி விவகாரம்





அயோத்தியில் ராமர்கோயில் இருந்ததா? பாபர் மசூதி இருந்ததா? என்று சரித்திரத்தை இதுவரை மேடைகளில் மட்டும் தோண்டி எடுத்த நிலை போய், தற்போது ராமரா? பாபரா? என்று சர்ச்சைக்குரிய நிலம் நிஜத் தோண்டலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


ராமர் கோயில் இருந்தமைக்கான சான்றுகளே தோண்டுகையில் கிடைக்கப்போவது. உலகம் அயோத்தியை ராமர் பிறந்த இடமாக ஒத்துக்கொள்ளும் நிலை கண்ணெதிரே விரிகின்றது. அதனால் ராமர் கோயில் கட்டுவதற்கு நாடாளுமன்றத்தில் சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் வலியுறுத்தத் தொடங்கியுள்ளது.

அதேநேரம், அயோத்தி பாபரின் புகழிடம். விஸ்வஹிந்து பரிஷத் சொல்வதுபோல், எதுவுமே தோண்டலில் கிடைக்கப்போவதில்லை என முஸ்லிம் தரப்பும் தோண்டலை மிக அவதானமாகக் கண்காணிக்கின்றது.

அயோத்திக்கும், நீதிமன்றத்துக்கும் இணைபிரியாத உறவு இருக்கும் போலுள்ளது. ஏனெனில் அன்றே 1940இல் பைசாபாத் நீதிமன்றத்தில் பாபர் பள்ளிவாசல் சன்னிபிரிவு இஸ்லாமியருக்குச் சொந்தமா? ஷியா பிரிவினருக்குச் சொந்தமா? என்று ஒரு வழக்கு உதயமானது.

அன்று தொட்டு இன்றுவரை அயோத்தி நிலம் சர்ச்சைக்குரிய விடயமாகி, அயோத்தி என்றாலே சிக்கலுக்குரியது என்று பெயர்பெறும் அளவுக்கு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது போலும்.

இன்று அயோத்திநிலம் ராமருடையதா? பாபருடையதா? அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது. 54 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுவிட்டது.



ஆனால் தீர்ப்புத்தான் வந்தபாடில்லை.

மற்றொரு வழக்கு டெல்லி உச்ச நீதிமன்றத்தில் இன்றைய துணைப் பிரதமர் அத்வானி முதலான 58 பேர் மீதானது. பாபர் மசூதியை இடித்தமை தொடர்பாக தொடரப்பட்ட வழக்கு இதுவரை கடந்த 10 ஆண்டுகளாக வழக்கு விசாரணைக்குட் படுத்தப்படாமலேயே கிடப்பில் உள்ளது.

1992ஆம் ஆண்டு உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி (இன்றைய துணைப்பிரதமர்) அரசியல் இலாபம் கருதி, தனது நலனில் மட்டும் குறி வைத்து, குஜராத் மாநிலம் சோமநாதபுரத்திலிருந்து அயோத்திநோக்கி "பாபர் மசூதியை மண் மேடாக்கி ராமருக்கு ஆலயம் எழுப்பு வோம்."எனும் ரத யாத்திரை (அத்வானி) அவர் வைத்த இலக்கை தப்பாமல தாக்கியது.

1992 டிசம்பர் ஆறாம் திகதி பாபர் மசூதி தூளாகிப்போனது. அன்று உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி இன்று துணைப்பிரதமராகவும் உயர்ந்துவிட்டார்.

அன்று மதத்தின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட தீ, இன்றுவரை விட்டு விட்டு எரிந்தபடிதான் இருக்கின்றது. துணைப்பிரதமர் ஆனவுடன் அத்வானியோ அயோத்தி என்ற சொல்லையே மறந்து விட்டார்.

ஏனெனில், அயோத்திப் பிரச்சினைக்கு சுமுக உடன்பாடு ஏற்படுவதாக இருந்தது. வி.ஹி.ப.சிறுபான்மைப் பிரிவின் அகில இந்திய துணைத் தலைவர் முகமது ஷாகிக் கான்,ராஜ்ய சபை முன்னாள் உறுப்பினர் பீகல் உத்சவ், இஸ்லாமிய பெரியவர் மவுலானா ரப்பானி ஆகிய மூவரும் ஒன்றிணைந்து அயோத்தியில் "எந்த இடத்தில் இராமர் கோயில் கட்ட சங்கபரிவாரங்கள் விரும்புகின்றனவோ அந்த இடத்தில் கட்டிக் கொள்வது. அக்கோயிலில் 11 கிலோ மீற்றருக்கு அப்பால் பாபர் மசூதியை கட்டிக்கொள்வது" என்று யோசனையை முன் வைத்தனர்.

இவ் யோசனையை ஏற்றுக் கொள்ளாத அத்வானி, இஸ்லாமிய பெரியவரிடம் இந்த சமரசத் திட்டத்தை கைவிட்டு விடுங்கள் என்று கூறி வெண்ணைத்திரண்டு வருகையில் தாழியைப்போட்டு உடைத்து விட்டார்.

பிரதமர் வாஜ்பாயோ கட்சியின் முடிவே எனது முடிவு, அதை எதிர்த்து இவ்யோசனையை ஏற்கமுடியாது என்று கைகளை விரித்து விட்டார்.

பிரச்சினையைத் தீர்ப்பதல்ல. வளர்த்து தீ மூட்டிக்குளிர்காய்வதுதான் பா.ஜ.கட்சியின் நோக்கம் என்று கொதித்துப் போயினர் இஸ்லாமிய தரப்பினர். முகமது ஷாகிக்கான் தனது பதவியையும் இராஜினாமா செய்து விட்டார்.

இதனால் உற்சாகமடைந்த விஸ்வ ஹிந்து பரிஷத் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ராமர் ஆலயம் கட்டுவதற்கான கல்தூண்கள், ஜன்னல்கள், கதவுகள் என எல்லா கட்டுமானப் பொருட்களையும் அயோத்தியைச் சுற்றிக் குவித்தது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட டிசம்பர் 06ஆம் திகதியே கட்டுமானப்பணி தொடங்கப் போவதாக சூளுரைத்தது.

ஆனால், அயோத்தி நிலத்தில் இறுதித் தீர்ப்பு வரும்வரை எவ்வித கட்டுமானப் பணிகளோ,மதச்சடங்குகளோ நடத்தக் கூடாது என உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இதனையடுத்து உச்ச நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை நீக்குமாறு வாஜ்பாய் அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

ஏன்.. எதற்காக... வாஜ்பாய் அக்கறை கொண்டுள்ளார் என்றால், முதல் காரணம், நாடாளுமன்றத்தையே முற்றுகை இடுவோம் எனும் முஸ்லிம் சாதுக்களின் (துறவி) சூளுரைப்பு.

இரண்டாவது, தனது பதவியை தக்கவைக்கும் அரசியல் ஆதாய நோக்கம்.

இதனிடையே, ஜென்ம ஸ்தான இடத்தை ராமர் ஆலயத்திற்கு பாபரே தானம் வழங்கியிருப்பதுடன், தமது மகன் ஹுமாயூனுக்கு ஓர் உயிலும் எழுதியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த உயிலில். "இந்துக்களின் இதயத்தில் இடம்பெற வேண்டும். அதற்கு மாட்டிறைச்சி உண்பதை கைவிட வேண்டும். பல்வேறு சமூகங்களுக்கும், பல்வேறு வணக்கத்துக்குரிய இடங்கள் இருக்கின்றன. எந்தக் காரணம் கொண்டும் பூஜிக்கத்தக்க அந்த இடங்களை களங்கப்படுத்தி விடாதே" என்று தனது மைந்தனுக்கு பாபர் அறிவுரை கூறியிருப்ப தாக உயில் கூறுகின்றது.

இவ்வாறு, பாபர் கூறியிருப்பது பொய் என்றும், பாபரே ராமர் கோயிலுக்கு இடம் வழங்கியது கட்டுக்கதை என்றும் தமது பக்கத்தை நியாயப்படுத்த முஸ்லிங்கள் புனைந்துள்ளமையே உயில் விபரம் என்றும் இவற்றைக் கூறிவிட முடியும்.

ஆனால், அந்த "உயில்" டெல்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்தில் இன்றும் பத்திரமாக இருக்கின்றது என்று கூறப்படுவதால், "புனித இடங்களைக் களங்கப்படுத்தாதே" என்று கூறிய பாபர் ஏற்கனவே இருந்த ராமர் ஆலயத்தை இடித்திருப்பாரா...?, அதில் பாபர் மசூதியை எழுப்பி இருப்பாரா...?

ஆனால், இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கக் கூட விஸ்வ ஹிந்து பரிஷத்துக்கு விருப்பமில்லைப் போலுள்ளது.

அதனால் தான் தற்போது தோண்டலில் ராமர் ஆலய சான்றுகள் கிடைத்தவுடன், அயோத்தியில் ராமர் ஆலயம் எழுப்பப் படும். என்றும், அதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தியா இந்து நாடாக ஆகிவிடும் என்றும் வி. ஹி. ப. தலைவர் தொகாடியா உறுதிபடக் கூறுகின்றார்.

அதுமட்டுமன்றி, "முஸ்லிம் மதசார்பான

**அ. கலைவாணி**

அமைப்புக்களை மூடிவிட வேண்டும்...., இந்தியாவில் வாழ்வதால் முஸ்லிம்கள் அனைவரும் தம்மை இந்துக்கள் என்று ஒப்புக் கொள்ள வேண்டும்...., இந்து மதத் தினரைத் தவிர வேறு மதத்தினருக்கு இந்தியக் குடியுரிமை இருக்காது" என வாஜ்பாய், அத்வானியின் குரு மகா சன்னிதானம் ஆர். எஸ். எஸ். தலைவர் சுதர்சன் உரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதையாக அயோத்தித் தோண்டலில், புதிய திருப்புமுனை தோன்றியுள்ளது.

அயோத்தி நிலம், ராமர் பிறந்த இடமுமல்ல, மசூதி இருந்த இடமுமல்ல. புத்தர் கோயில் இருந்த இடம் என்பதுதான் உண்மை. எனவே அயோத்தி நிலத்தை எம்மிடம் தர வேண்டும் என்கின்றது விசுவ புத்தர் சங்கம்...தற்போது, விசுவ புத்தர் சங்கத்தின் தலைவர் உதித் ராஜ் நேற்று இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அயோத்தி நகரம், புத்த மதத்தினர் வாழ்ந்த நகரம் என்பதுடன் இங்கு 3000 புத்த சாமியார்கள் இருந்தனர் என்பதனால் அயோத்தி நிலம் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்கின்றார் புத்த சங்க தலைவர். எனவே, அயோத்தி நிலம் உண்மையில் யார்தான் வாழ்ந்த இடம். இராமரா...? பாபரா...?, புத்தரா...? இது புதிய கிறுகிறுக்கும் பிரச்சினையாக தற்போது உள்ளது.

கடந்த மாதம் தொடக்கம் தொடரப்பட்டுள்ள தோண்டலானது இதுவரை எவ்வித சான்றுகளையும் (இந்த மதம் என்று) வெளிக்காட்ட வில்லை. இந்தத் தோண்டலானது உண்மையில் பயனளிக்குமா... அல்லது வித்தைக்குரிய விளையாட்டாக முடிந்திடுமா... என்பதெல்லாம் தோண்டலின் முடிவில் தான் வெளிப் படமுடியும். அல்லது தோண்டித் தோண்



டிக்களைத்துப் போய் எட்டாத பழம் புளிக்கும் என்ற நிலையும் கூட உருவாகலாம்.

அத்துடன், அயோத்தி நிலம் சர்ச்சைக் குரியதாகவே காலம் காலமாக இருந்து விடவும் கூடும். ஏனெனில், அயோத்தி இருக்கும் மட்டும்தான் அத்வானியோ, வாஜ்பாயோ அரசியலில் நிலைத்திட முடியும் என்று அவதானிகள் நம்புகின்றார்கள்.

மத்தியப் பிரதேச மலைப் பிரதேசங்களில் பத்தாயிரம் ஆதிவாசிகளுக்கு சூலாயுதம் வழங்கப்பட்டு விட்டதாக விஸ்வ ஹிந்து பரிஷத் அதிரடியாகத் தற்போது அறிவித்துள்ளது.

இது எங்கே கொண்டு சென்று விடும் என்பதுடன் இன்னும் 2004 நாடாளுமன்ற தேர்தலுக்கிடையில் என்னவெல்லாம் நடந்திடப் போகின்றதோ... எனவும் அச்சம் அவதானிகளிடையே நிலவுகின்றது.

ஆக மொத்தம், அரசியலில் அயோத்தி தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துள்ளது என்பதா....? அல்லது அயோத்தியும் அரசியலும் இரட்டைக் குழந்தைகள் என்பதா...? □

# நான்காவது வாரத்தில் ஈராக் போர்



அமெரிக்கா, பிரிட்டன் தலைமையிலான படைகளுக்கும், ஈராக்கிய படைகளுக்கும் இடையிலான போர் நேற்றுடன் மூன்று வாரங்களை நிறைவு செய்துள்ளது. இந்தப் போர் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல தரப்பினரதும் எதிர்பார்க்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் இடம்பெற்று வருகின்றது. போர் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைவிட போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களே இன்று உலகை உலுக்கும் விடயமாக உள்ளது.

அமெரிக்கா தலைமையிலான படைகள் தொடர்ந்தும் முன்னேறி ஈராக்கின் கணிசமான பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளன. அத்தோடு, தலைநகர் பாக்தாத்தையும் கைப்பற்ற ஈராக்கிய படையினருடன் கடுமையான போரிலும் ஈடுபட்டு வருகின்றன. பாக்தாத்தின் வடக்கு ,தெற்கு, கிழக்கு மற்றும் தென்மேற்குப் பகுதிகளூடாக உள்நுழைய இந்தப் படைகள் பகீரதபிரயத்தனங்களிலும் ஈடுபட்டுள்ளன.

இருந்தபோதும் அமெரிக்க - பிரிட்டிஷ் படை வட்டாரங்களின் தகவல்களுக்கு எதிர்மாறான தகவல்களை ஈராக்கிய அரச தரப்பு வெளியிட்டு வருகின்றது. அத்தோடு களமுனையில் நிற்கும் செய்தியாளர்களது தகவல்களும் வேறுவிதமாக அமைகின்றன. ஈராக் குறித்து வெளிவரும் தகவல்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக அமைந்து காணப்படுகின்றன.

அமெரிக்க, பிரிட்டிஷ் படைத் தரப்பு கூறுமாப்போன்று ஈராக் நிலைமைகள் இல்லை என்பது ஓரளவுக்கு வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. அமெரிக்க படைகளின் முன்னேற்றம் குறித்த செய்திகள் ஓரளவுக்கு உறுதி செய்யப்படும் நிலையிலும், பாக்தாத் தொடர்பாக வெளியாகும் செய்திகளை ஈராக் தொடர்ந்து மறுத்து வருகின்றது. பாக்தாத்திற்குள் சில பகுதிகளை தாம் மீட்டெடுத்திருப்பதாக அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் குறிப்பிடும்போதிலும் அவ்வாறான நிலை இல்லை என்பதை ஈராக்கிய அரசு திட்டவட்டமாக மறுக்கின்றது. அதாவது, களமுனையில் குறிப்பாக தலைநகரில் ஒரு திடமான நிலை காணப்படவில்லை. அமெரிக்க கூட்டுப்படைகளுக்கு சாதகமான நிலைமை இன்னமும் உருவாகிவிடவில்லை என்பதையே இது கோடுகாட்டி நிற்கின்றது.


உண்மையில், அமெரிக்கா தலைமையிலான படைகள் ஈராக்கிய போரில் தமது திட்டங்களை மாற்றியமைக்க [illegible]ய நிலை உருவாக்கப்பட்டுவிட்டது. அவர்களின் படை நடவடிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டும் இருந்தது. இதற்கு எதிரிகள் பற்றி சரியான மதிப்பீ



டொன்றை படை தலைமைகள் கொண்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. ஈராக்கின் பலம் குறித்து சரிவர மதிப்பிடாமையால்தான் போர் இவ்வளவு காலத்திற்கு நீடிப்பதாக சனாதிபதி புஷ் மீதும் பிரதமர் ரொனிபிளேயர் மீதும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டுப் படை கட்டமைப்புக்குள்ளும் முரண்பாடுகள் எழுந்திருக்கின்றன. இந்நிலையில் படை திட்டமிடலில், சில அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டு மேற்கொண்டும் போர் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஈராக்கின் நகர்ப் பகுதிகளை இலக்காகக் கொண்டு போர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அவற்றை கைப்பற்ற அமெரிக்கா-பிரிட்டிஷ் படைகள் பெரும் விலையைச் செலுத்த வேண்டிய நிலைமை இருந்து வருகின்றது. பஸ்ரா, குவைத்தின் எல்லையருகேயுள்ள முக்கியமானதும் பாக்தாத்திற்கு அடுத்த பெரிய நகரமாகவும் இருக்கின்றது. இதனை கைப்பற்ற பிரிட்டிஷ் படைகளுக்கு நீண்ட காலம் பிடித்தது. அத்தோடு, இழப்புக்களையும், பின்னடைவுகளையும் அவர்கள் சந்திக்க வேண்டி வந்தது. தற்போது இந் நகரை பிரிட்டிஷ் படைகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்ற போதிலும் அதனை தக்கவைத்துக் கொள்ள பெரும்பாடுபடுகின்றன.

பாக்தாத்தின் மையப் பகுதி




இதனைவிட ஈராக்கின் சில நகர்ப்பகுதிகள் வீழ்ச்சிகண்டுள்ள நிலையில் பாக்தாத் நகரிற்கான சண்டைகளே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. ஈராக்கைப் பொறுத்தவரை சனாதிபதி சதாம் ஹுசைன் தனது படைப் பலத்தின் பெரும் பகுதியை பாக்தாத்தை பாதுகாக்கும் நடவடிக்கைக்காகவே ஈடுபடுத்தியுள்ளார். அவருக்கு விசுவாசமிக்க குடியரசுப் படைகள் இங்கு பெருமளவில் நிலைகொண்டுள்ளன. அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளும் பாக்தாத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். எனவே தலைநகருக்கான போர் அடுத்து வரும் நாட்களில் மிகத் தீவிரமாக நடை பெறப்போவது உறுதி.

இருந்தபோதிலும், ஈராக்கிய படைகளின் கடுமையான எதிர்ப்புக்களால் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் தமது போர் தந்திரோபாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அத்தோடு, மரபு சாரா தாக்குதல்களில் ஈராக் படைகள் ஈடுபட தயாராகி விட்டன என்ற அறிவிப்புக்களும் அமெரிக்க, பிரிட்டன் படைகளை கிலி கொள்ள வைத்துள்ளன. இந்நிலையில் பாக்தாத்திற்கான போரில் சில மாற்றங்களை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்பதைவிட மாற்றம் செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டனர் என்பதே சரியானதாகும். தலைநகரில் கைப்பற்றும் நிலப்பகுதிகளைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியாத நிலையில் தாக்கிவிட்டு திரும்பும் தந்திரோபாயத்தையும், இலக்குகளை இனம் காணும் நடவடிக்கைகளிலும் அமெரிக்க,பிரிட்டன் படைகள் ஈடுபடுவது போல் தெரிகிறது. இதனை இராணுவ நிபுணர்களும் உறுதி செய்துள்ளனர்.

இன்றைய நிலையில் கூட்டுப் படைகளுக்குப் பெரும் ஆளணிப் பிரச்சினையொன்று ஏற்பட்டு இருப்பதனை களமுனை நிலவரங்கள் கோடிகாட்டுகின்றன. கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள போதிய ஆளணி தேவை குறித்து களமுனை அதிகாரிகள் பிரஸ்தாபித்துள்ளனர். பாரிய நிலப்பரப்புக்களைத் தொடர்ந்து தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள பெரும் ஆளணி தேவையான நிலையில் அதனை எவ்வாறு ஈடுசெய்வது என்பதும் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சதாமிற்கு எதிராக செயற்படுவோரிடமோ பெருமளவு படைபலம் இல்லை. உடனடியாக ஈராக்கில் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் புதிய ஆளணிகளைத் திரட்டுவது என்பதும் சாத்தியமற்ற விடயங்கள். இந்நிலையில் சதாமின் படைகள் ஊடறுப்புத் தாக்குதல்களை நடத்துமானால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பதும் கூட்டுப் படைகளுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இது கூட்டுப்படைகளின் முன்னேறும் வேகத்தைக் குறைக்கக் கூடும்.

இதற்கிடையே ஈராக்கின் கிராமப்புறங்கள் கூட கூட்டுப்படைகளுக்கு அச்சுறுத்தல் அளிப்பவையாக உள்ளன. அவற்றின் மீது அவர்களின் கவனம் தற்போது திரும்பியுள்ளது போல் தெரிகிறது. சதாமும் அவரது படை அதிகாரிகளும் கிராமப்புறங்களுக்குள் மறைந்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளதுடன், கிராமங்கள் மீதும் கண்மூடித்தனமான விமான ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

ஈராக்கின் வடக்கே குர்திஷ்களின் துணையுடன் சில பகுதிகளை அமெரிக்க படையினர் மீட்டுச் கையகப்படுத்தியுள்ளனர். தெற்கிலும் கணிசமான பகுதிகள் வீழ்ந்துவிட்டன. இருப்பினும் தாக்குதல்களால் பெருமளவில்



ஈராக்கிய மக்கள் கொல்லப்பட்டும், படுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் தமது வாழ்விடங்களை இழந்தும், அங்கிருந்து வெளியேறியும் அகதிகளாகியுள்ளனர். தொடர்ந்தும் போர் நடைபெறுமானால் மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுவர் என்பது உறுதியாகும்.

ஈராக் சனாதிபதியோ அமெரிக்க, பிரிட்டன் படைகளுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டிய நேரத்திற்காக காத்திருக்கிறோம். அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டப்படும், ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து அவர்களை விரட்டியடிப்போம் என சூளுரைத்துள்ளார். பதிலுக்கு அமெரிக்க, பிரிட்டிஷ் உயர் தலைவர்கள் இருவரும் ஈராக்கில் ஆட்சி மாற்றத்திற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாக நடத்தி வருகின்றனர். அத்தோடு இறுதிக்கட்ட போரொன்றுக்கான நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

எனினும், தலைநகர் பாக்தாத் அவ்வளவு சுலபமாக வீழ்ந்து விடுமென சொல்ல முடியாது. பாக்தாத் நகரில் சதாம் பெரும் போர் வியூகம் ஒன்றை அமைத்து காத்திருக்கின்றார். அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் பாக்தாத்திற்கான இறுதி தரைவழிச் சண்டைகளை இன்னமும் ஆரம்பிக்கவில்லை. இந்நிலையில், பாக்தாத் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளிடம் வீழ்ந்து விடுமா? அல்லது அவர்களுக்கு சதாம் தக்க பாடம் புகட்டுவாரா? என்பதே இன்றுள்ள கேள்விகள். பாக்தாத்திற்கான போர் மிகவும் மூர்க்கமானதாக அமையப் போகின்றது என்பதே தற்போதைக்கு உறுதியாக கூறக் கூடியதொன்றாகும்.

- அனிக்கிலஸ்.

# சிறுவர் நலன் தொடர்பான இருநாள் பயிற்சிப் பட்டறை!

சிறுவர் நலன்கள் தொடர்பாக ஆராயும் பயிற்சிப் பட்டறை ஒன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இன்று முதல் இருநாட்கள் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் சிறிலங்கா அரச பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யுனிசெவ் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

## சமாதான உடன்பாடு குறித்து மக்களுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கை கண்காணிப்புக்குழுவின் பொத்துவில் மக்களின் நலன்கருதி ஒவ்வொரு புதன் கிழமையும் பிற்பகல் 2.00 மணியிலிருந்து 3.00 மணிவரை சமாதான உடன்படிக்கை அமுலாக்கம் தொடர்பாகவும், ஏனைய பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாட ஒழுங்கு செய்துள்ளனர்.

இதன் பிரகாரம் பொத்துவில் பிரதேச செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை முதல் தடவையாகக் கண்காணிப்புக்குழுத் தலைவர் தலைமையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

- பெண்கள் தொடர்பான விடயங்கள் -

# ஆராய்ந்து செயற்படுத்த வவு-வில் புதிய அமைப்பு!

(வவுனியா)

பெண்கள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து செயற்படுத்துவதை நோக்காகக் கொண்டு வவுனியாவில் புதிய பெண்கள் அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச பெண்கள் மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் தேனிலா தலைமையில் இது தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த திங்களன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட 32அமைப்புக்களின் பிரதிநிதிகளில் இருந்து 15 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.


## 3ஆம் ஆண்டின் நினைவுகளில்....



கப்டன்

மணியிழை /அருள்விழி

சோதியா படையணி

(கவிதா செல்வநாயகம்)

மழலையாய் 01 - 06 - 1979

மாவீரராய் 10 - 04 - 2000

விழி நீர் சொரியருவி விரைமலர்கள் கரமேந்தி
வீரமுடன் நீர் செய்த தியாகமதை மனதிருத்தி
மூன்றாண்டென்ன எத்தனை ஆண்டானாலும்
திரமுடன் நீர்காட்டிய வழியில் நடப்போம்

இந்நாளில் இவருடன் வீரகாவியமான ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

10-04-2003 இன்று எமதில்லத்தில் நடைபெறும் நினைவுநாள் நிகழ்விலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு சக போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவீரர் மண்டப அருகாமை,
மல்லாவி.

(3068)

கப்டன் மணியிழை
குடும்பத்தினர்.



## 12ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயக மண்ணில் வித்தாக 27 □ 01 □ 1966



தாயக மண்ணில் விடுதலைக்காக 10 □ 04 □ 1991

கப்டன் சங்கர்

(முருகையா – சுந்தரலிங்கம்)

(சுறுவாக்கேணி வாழைச்சேனை)

தங்கத் தலைவனின் சேனையில்
களம்பல கண்ட கரந்தடி - வீரனே
கயவர்கள் பயந்தோட - நீ
பல சாதனை செய்தாய்
கண் எதிரே நீ சரிந்தாய்
எதிரி சேனையை வென்றாய்
கயவர்களின் கபடத்தனத்தால்
நீ வீரகாவியமானாய்.

இவருடன் வீரகாவியமான ஏனைய மாவீரர்களை யும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்: மு. உருத்திரமூர்த்தி.(M-R-M)
கச்சேரியடி. ஐயனார்வீதி.
கிளிநொச்சி.

(3070)



## நீங்காத நினைவில்....



அமரர் சதாசிவம் சற்குணசிங்கம | அமரர் சற்குணசிங்கம் விஜயலட்சுமி

27-02-1942 ← மலர்வு → 06-11-1942

05-01-1971 ← உதிர்வு → 13-04-2000

திதி: 10-04-2003 (4ஆம் வட்டாரம் மண்டைதீவு)

அன்புடன் எம்மை அரவணைத்துப்
பாசத்துடன் எம்மை வளர்த்து ஆளாக்கி
எங்கள் இதயங்களில் குடியிருக்கும் அன்புத்
தெய்வங்களே
வார்த்தை ஒன்று கூடச் சொல்லாமல் எம்மை விட்டு
பறந்தோடிச் சென்றதெங்கே?
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் – உங்களைப்
பிரிந்த துயரை எண்ணித் தினமும்
கலங்கித் தவிக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

450, கரியாலை,
நாகபடுவான், முழங்காவில். (2918)

அன்பு மகன், மகள், மருமகன், மருமகள், பேரப்பிள்ளை
மற்றும் உற்றார் உறவினர்கள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



3rd எஞ்சினியர் அமுதன்

(செல்வரத்தினம் ஜீவகரன்)

அன்பு மாணவனே!
சர்வதேசக் கடற் பரப்பில் 2003–03–10 இல்
நீ மறைந்த 31ஆம் நாளில்,
உன்னை நினைந்துப் பார்க்கின்றேன்.

பூநகரியின் மறவர் குறிச்சியில் பிறந்த
வீரமறவனே!
நீ என்னிடத்தில் வந்தது,
அரசியல் விஞ்ஞானம் கற்பதற்கல்லவா?

தேசிய இனம், தேசியநாடு, தேசிய விடுதலை
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
இயக்க வரலாறு, யுத்தவரலாறு, சமாதானம்
தமிழ் அரசு, உரிமை, சுயநிர்ணயம்

இவற்றுக்காக!
சர்வதேசக் கடற் பரப்பில் உன் தியாகம்
தமிழ் ஈழ வரலாற்றில் ஒரு ஏடு
தமிழரின் தாகம் தமிழ் ஈழ தாயகம்.

உன் நினைவில்
என்.சுந்தரமூர்த்தி - ஆசிரியர்
B.A. (Hons). M. phil. (அரசியல் விஞ்ஞானம்)
Dip - in - Mass Media. ஆலங்கேணி, பூநகரி.

(3069)

## சிந்தனைக்கு

நாம் விரும்பினாலும், விரும்பாது விட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறி விட்டது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-04-2003

## எதிர்பார்ப்பிற்கு மாறானதால்...!

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீன்பிடிக்கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்டுள்ள இறுதி அறிக்கையானது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குச் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ் அறிக்கையானது பக்கச்சார்பானது என அவரின் குற்றச்சாட்டிற்கு உள்ளாகியுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இத்தாக்குதலுக்கு மூன்றாவது அணி ஒன்றே பொறுப்பானது என்பதும், கடலில் இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு புலிகளும்-சிறிலங்கா கடற்படையும் கடலைக் கண்காணிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளமையே சனாதிபதி சந்திரிகா சீற்றம் கொள்வதற்குக் காரணமாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு மூன்றாம் தரப்பொன்று இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்ற போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆரம்ப அறிக்கையே கவலையையும், ஏமாற்றத்தையும் கொடுப்பதாகவே இருந்திருக்கும். ஏனெனில், இத்தாக்குதல்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் விடுதலைப்புலிகளின் மீது சுமத்தப்பட வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்புக்களாகும்.

விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது விடுதலைப்புலிகள் உடன்பாட்டை முறித்துக் கொண்டு தாக்குதல்களை நடத்துவார்கள் என்றே சனாதிபதி சந்திரிகா போன்றவர்கள் எதிர்பார்த்தார்கள். இதனைக் குறிக்கோளாகக்கொண்டே இத்தகைய தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், அது பயனற்றுப் போன நிலையில் புலிகள் பெரும் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றனர். சமாதான முயற்சிகளில் ஈடுபாடு காட்டுவதென்பது வெறும் கண்துடைப்பு என்பது போன்றதொரு கருத்தை உருவாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவையே. சீன மீன்பிடிக்கப்பல் மீதான தாக்குதலும், இராணுவம் பயணித்த 'லங்காத்முடித' கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் ஆகும்.

இவற்றை நன்கு ஆராய்ந்தறிந்த பின்னரே, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிக்கை வெளியிட்டது. இவ் அறிக்கையானது, விசாரணையின் பின்னான முடிவாகும். இந்நிலையில் இவ் அறிக்கையானது பக்கச்சார்பானது எனவும், புலிகளுக்குச் சார்பானது எனவும் கூறுவது அர்த்தமற்ற தொன்றாகும். அத்தோடு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைப் பொறுத்து அது என்றுமே புலிகளுக்குச் சார்பான விதத்தில் நடந்து கொண்டது கிடையாது.

மாறாக கடந்த காலப் போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் தொடர்பாக அவசர கோலத்தில் விடுத்த அறிக்கைகளில் விடுதலைப் புலிகள் மீதே அது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருந்தது. இந் நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப் புலிகளுக்குச் சார்பான ரீதியில் –அதாவது பக்கச்சார்பானதாக அறிக்கை வெளியிட்டுள்ளது எனக்குற்றஞ் சாட்டுவது தவறாகும். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விருப்பிற்கேற்ப/ உணர்விற்கேற்ப அறிக்கை விடுவதானால் சர்வதேச ரீதியிலான போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏன்?

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவ்வாறு எதிர்பார்ப்பதிலும் தவறு ஒன்றுமில்லைத்தான். ஏனெனில், தமது அபிமானத்திற்குரியவர்களையே நீதியரசர்களாக நியமிப்பதும் தேவைக்கேற்ற விதத்தில் நீதித்துறையைக் கையாளவும் முற்படும் நாட்டின் "தலைவர்" ஒருவரிடம் இத்தகைய குணாம்சங்கள் எதிர்பார்க்கத்தக்கவையே.

இதேவேளை விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிறிலங்கா அரசாங்கத்திற்கு சம அந்தஸ்தில் வைத்துக் கண்காணிப்புக்குழு அறிக்கை வெளியிட்டிருப்பதும் சனாதிபதி சந்திரிகாவின் சீற்றத்தை ஏற்படுத்தியதற்கான மற்றொரு காரணியாகும். இதன் மூலம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்துள்ளது என்பது சந்திரிகா அம்மையாரின் குற்றச்சாட்டாகும்.

ஆனால், கண்காணிப்புக்குழு இவ்விடயத்தில் எந்தவிதமான தவறையும் செய்ததாக இல்லை. வேறு விதமாகக் கூறின் கண்காணிப்புக்குழு இதற்குப் பொறுப்பு ஏதுவும் இல்லை என்றே கூறலாம். ஏனெனில், சிறிலங்கா அரசிற்கும்–விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாடு இருதரப்பினருக்கும் சமநிலையில் இருந்தே செய்துகொள்ளப்பட்டதாகும். இருதரப்பும் சமமான நிலையில் இல்லாதுவிடில் எவ்வாறு இவ்வாறானதொரு உடன்பாட்டைச் செய்து கொள்ள முடியும்? அத்தோடு, கண்காணிப்புக்குழு ஒன்றை நியமிக்கவும், செயற்படவும் அனுமதிக்க முடியுமா?

இத்தவகையில் சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பது மட்டுமல்ல, அரசியல் அபிலாசைகளின் பாற்பட்டதாகும். வேறுவிதமாகப் பார்த்தால் சமாதானத்திற்கு ஊறு விளைவிக்கும் நோக்கத்தின் பாற்பட்டதுமாகும்.

# தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக பிரதமர் ரணிலுடன் இன்று ஆராய்வு

## தீர்வின்றேல் தொடர் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக கல்வி அமைச்சர் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு பிரதமரை இன்று சந்தித்துப் பேசவுள்ளது.

பிரதமரைச் சந்திக்கவுள்ள குழுவில் திறைசேரி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும இடம்பெறுகின்றனர்.

இதேவேளை, இன்றைய சந்திப்பில் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனங்கள் தொடர்பாக உரிய முடிவுகள் எடுக்கப்படாது விட்டால் உயர்தரப் பரீட்சைகளையும், தவணைப் பரீட்சைகளையும் மற்றும் பல்வேறுபட்ட விடயங்களையும் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குதல், வடக்கு - கிழக்கில் போட்டிப் பரீட்சைகள் மூலமர்க ஆசிரியர் பதவிகளுக்கு தகுதி உடையோரை தேர்ந்தெடுத்தல், ஆசிரியர் பதவி உயர்வு உட்பட பல முக்கிய விடயங்கள் அடங்கிய அறிக்கை நேற்று முன்தினம் பிரதமர் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தாயக கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைக்கு சமஸ்டி தீர்வாக அமையாது

## - அமெரிக்க பல்கலை . பேராசிரியர் கருத்து

(கொழும்பு)

தாயகக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகளுக்கு சமஷ்டி ஆட்சிமுறை தீர்வாக அமைய மாட்டாது என்று அமெரிக்க ரொபல் பல்கலைக்கழகத்தின் அரசியல்பீட பேராசிரியர் எலிஸ் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

பல்வேறு இனங்களைக் கொண்ட சமூகங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சமஷ்டி ஆட்சிமுற்றையே சிறந்ததென்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் செய்மதி தொலைக்காட்சி மூலம் தொடர்புகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சமஷ்டி ஆட்சிமுறையில், பல்வேறு நாடுகளின் தாயகக் கோட்பாட்டு அடிப்படையில் பிரச்சினைகள் எழுந்துள்ள போதும் அமெரிக்காவில் அத்தகைய பிரச்சினைகள் ஏற்படவில்லை.

தாயகக் கோட்பாடுகள் தொடர்பாக எழுந்த பிரச்சினைக்குத் தீர்வாகவே சில நாடுகள் சமஷ்டி ஆட்சிமுறையை தேர்ந்தெடுத்திருக்கின்றன. ஆயினும் பல்லின சமூகங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு சமஷ்டி முறை ஏற்றது என்றும் இதற்கு ஐக்கிய இராட்சியம் சிறந்த உதாரணமாக விளங்குகின்றது என்றும் வட அயர்லாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்தில் பல்லினத்தன்மையைக் கருத்தில் கொண்டு அதிகாரம் பரவலாக்கப்பட்டு வருகிறது என்றும் பேராசிரியர் காட்ஸ் கூறியுள்ளார்.

"அமெரிக்க சமஷ்டி முறையே இலங்கைக்கு எடுத்துக்காட்டு" என்னும் தொனிப்பொருளிலும் நடைபெற்ற கருத்தரங்கில் ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஜே.வி.பி.யுடன் கூட்டணி உடன்பாட்டின் இறுதிவடிவம் மாத இறுதிக்குள் எட்டப்படும்!

## -பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் நம்பிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பி. யும் இணைந்து கூட்டணியை அமைப்பதற்கான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் இம்மாத இறுதிக்குள் முடிவு செய்யப்படும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கூட்டணி அமைப்பது தொடர்பாக இரண்டு கட்சிகளுக்கும் இடையே ஏற்கனவே பல சந்திப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் தமது யோசனைகளை கடிதம் மூலமாகப் பரிமாறிக் கொண்டுள்ளன. இதேவேளை, கூட்டமைப்பு அமைப்பது தொடர்பானதீர்மானங்கள் எடுக்கப்பட்டதன் பின்னர் அது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் அறிவிக்கப்படும்.

இந்தியாவுக்கு விஜயம் செய்த சனாதிபதி நாடு திரும்பியதன் பின்னர் மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

இதேவேளை, இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டணியை அமைக்கும் ஒப்பந்தம எதிர்வரும் மே மாதம் கைச்சாத்திடப்படும் என்று ஜே.வி.பி. யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

## இந்தியா-சிறிலங்கா வர்த்தக உறவு குறித்த திட்டங்கள் விரைவில் நடைமுறை

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்குமிடையே நெருக்கமான வர்த்தக உறவுகளை ஏற்படுத்தும் திட்டங்கள் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் என்று சிறிலங்கா அரசாங்கப் பேச்சாளர் அலுவலக அறிக்கை ஒன்று கூறுகிறது.

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவு தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இந்திய அரசு கடந்த வாரம் இணக்கம் தெரிவித்திருந்தது. இதனையடுத்து இரு நாடுகளும் தமது தூதுக் குழுக்களுக்கு அறிவித்துள்ளன.

## குற்றச்செயல்களை உடன் அறிவிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் தினந்தோறும் இடம்பெறும் கொலை, கொள்ளை உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக உடனடியாக பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கும் திட்டமொன்று அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

பிரதமரின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படவுள்ள ஸ்ரீலங்கா தகவல் தொழில் நுட்ப அபிவிருத்தித்திட்டத்திற்கு இந்தப்புதிய நடைமுறை அமுல்படுத்தப்படுமென உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## பகிஷ்கரிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்க மற்றும் பிரித்தானியப் பொருட்களைப் புறக்கணிக்குமாறு பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தொழிற் சங்கவாதி அலவி மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈராக் மீதான போரின் பின்னணியிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதுடன் வங்கிகள் அமெரிக்க டொலருக்குப் பதிலாக யூரோவைப் பயன்படுத்துமாறும் கோரியுள்ளார்.

## கொள்ளை

கல்கிசையிலுள்ள நகைக் கடையில் நுழைந்த ஆயுதக்குழு நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துச் சென்றுள்ளது.

நகைக் கடைக்குள் நுழைந்த ஆயுதக் கும்பல் கடை உரிமையாளரின் தலையில் துப்பாக்கியை வைத்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

# பாக்தாத்தின் பெரும் பகுதி அமெ.படைகளின் கட்டுப்பாட்டில்!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் பெரும்பாலான பகுதிகளை அமெரிக்க கூட்டுப்படையினா நேற்று தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாகச் செய்திகள தெரிவிக்கின்றன. இதனிடையே பாக்தாத் நகரின் பெரும் பகுதியைப் பிடித்த அமெரிக்கப் படையினரை விரட்டியடிப்பதற்காக ஈராக் வீரர்கள் நேற்று அதிகாலை மீண்டும் ஆவேசப் போர் தொடுத்ததாகவும் நகரின் உயரமான இடங்களில் இருந்து அமெரிக்க வீரர்கள் மீது ஈராக் படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகவும் இதனைச் சமாளிக்க முடியாது அமெரிக்கப் படையினர் முதலில் பின்வாங்கிய போதும் பின்னர் விமானப்படையினரின் உதவியுடன் எதிர்த்தாக்குதல் தொடுத்து அதனை முறியடித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பாக்தாத் விமான நிலையத்தை தமது இராணுவத்தளமாக மாற்றிய அமெரிக்கப் படைகள் அங்கிருந்து நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பாக்தாத்தின் புறநகர்ப் பகுதியான அல்-கெய்துனா நகரம் முற்றிலுமாக அழிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வெளிச்சம் 81 ஆவது இதழ் வெளிவந்துள்ளது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடான வெளிச்சம்- கலை, இலக்கிய சமூக இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் தமிழீழ தேசியத் தலைவரின் கருத்துரையுடன், மாலிகா, புதுவை இரத்தினதுரை, கல்வயல் வே. குமாரசாமி, சந்திரா, துன்னாலை செல்வம், கௌஸீதகி, ஆத்மரிஷி, தமிழ் மாறன், சுதாமதி, தானா விஷ்ணு ஆகியோரின் கவிதைகளும், முல்லைக்கோணேசுடனான நேர்காணலும் இடம்பெற்றிருக்கின்றன. சிறுகதைகளை ஆதித்தநிலா, ந. சத்தியபாலன், அ.இரவி, த.ம. சேந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், முல்லை யேசுதாசன் ஆகியோரும் கட்டுரைகளை ஞாபகன், செ.கிருஷ்ணராஜா ஆகியோரும் எழுதியுள்ளனர். இவற்றுடன் மலைமகளின் களவெளிப்பாடும் வின்சென்ற் புளோரன்ஸ், விழிமைந்தன் ஆகியோரின் மொழிபெயர்ப்புகளும், புத்தகச் செய்திகளும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. இது வெளிச்சத்தின் 81 ஆவது இதழாகும்.

# கிளி.யில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்பாட்டுச் செயலமர்வு

## சு.ப.தமிழ்ச்செல்வன், பேணாட் குணதிலக ஆரம்பித்து வைப்பர்

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்பாட்டு செயலமர்வு இன்றும் நாளையும் கிளிநொச் சியில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சிறிலங்கா சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோர் ஆரம்பித்து வைக்கவிருக்கிறார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பாடசாலைச் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் போன்ற சிறுவர்கள் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

அத்துடன் சிறுவர்களின் நலன்களைப் பேணும் வகையில் மக்கள் செயற்பாட்டுக் குழுக்களும் அமைக்கப்படவிருக்கின்றன.

சிறுவர்கள் உரிமை பற்றிய பயிற்சி சட்டமீறல்களைத் தடுத்தல் மற்றும் கண்காணித்தல் மற்றும் இவர்களுக்கான விழிப்புணர்வுப் பரப்புரை, வயது குறைந்த நிலையில் ஆட்சேர்க்கப்பட்ட சிறுவர்களை ஒருங்கிணைத்தலும் விடுவித்தலும்,சிறிய கடன்திட்டமும் வருமானஉழைப்பும், தொழிற்பயிற்சி, கல்வி, சுகாதாரம் சத்துணவு உடல்நலக்கவனிப்பு , சமூக சேவைகளை வழங்குதல் மற்றும் குடும்பங்களுடன் இணைய முடியாது இருக்கும் சிறுவர்களுக்கான மாற்றீட்டுக் கவனிப்புத் தொடர்பாக இந்தக் குழுக்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன.

# வட்டக்கச்சியில் குடும்பஸ்தர் நித்திரையில் வெட்டிக்கொலை

வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரான்பற்று - பட்டந்தரிப்பைச் சொந்த இடமாகவும் வசுந்தரம் வீதி வட்டக்கச்சியில் [illegible] வருபவருமான நாகராசா இரவீந்திரன் (வயது -32) என்பவரே நேற்று அதிகாலை 1.00 மணியளவில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

வட்டக்கச்சியிலுள்ள மினிப்பிரியா திரையரங்கு உரிமையாளரான இவர், சம்பவதினம் மனைவி பிள்ளைகளுடன் திரையரங்கினுள் நித்திரையில் இருந்த வேளை கழுத்தில் வெட்டப்பட்டு அவ்விடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.இச்சம்பவம் குறித்து வட்டக்கச்சி காவல் பணிமனையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (12)



## யாழ். நகரில்...

இப்பகுதி மனித நடமாட்டம் அற்ற பகுதி. இவ்விடத்தில் எப்படி படையினர் மக்களுக்கு பாதுகாப்பு வழங்க முடியும் எனக் கேட்டுள்ளார். இதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கும் வகையில் நகரப்பகுதியிலோ அல்லது மாநகர சபைக்குச் சொந்தமான பகுதியிலோ முகாம் அமைக்க முடியாது எனவும் விரும்பினால் கல்லுண்டாய் போன்ற பகுதியில் மக்களின் சம்மதத்தைப் பெற்று முகாம் அமைப்பதே பொருத்தமானது எனத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ். அரச செயலகத்தில் சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற சந்திப்பிலும் எதுவித முடிவும் எட்டப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப்புலி...

களைக் குவித்தது எமது சிறப்புப் படையணி"

"தமிழீழத்தில் தலைவரால் முதன்முதலில் உருவாக்கப்பட்ட தாக்குதல் படையணியின் தலைவனாக இருந்து வீரமரண மடைந்த லெப்.சீலன் அவர்களின் நாமத்தைக் கொண்ட எமது படையணி எமது மக்களின் நிமிர்விற்காக இன்று வரை 1055 மாவீரர்களை அர்ப்பணித்திருக்கிறது. எமது படையணியின் பல போராளிகள் தமது உயிர்கொண்டு அசாத்தியமான பல சாதனைகளைப் புரிந்தவர்கள். தமிழீழத்திற்குப் புகழ் சேர்த்த பல தளபதிகளையும் எமது படையணி தந்திருக்கிறது.

" பன்னிரண்டு வருடங்களாகத் தொடர்ந்து சமராடி களத்துள் வாழ்ந்த எமது படையணி இன்று பாரிய வளர்ச்சி நிலையை எட்டித் தமிழர்களுக்கும், தமிழர் தலைவனுக்கும் வலுச்சேர்த்தபடி களத்தில் நிற்கிறது. பதின் மூன்றாவது அகவையில் கால் பதிக்கும் நாம் மகிழ்ந்திருக்கும் இந்த வேளையில், எமது உணர்வுகளை மக்களுடன் பகிர்ந்துகொள்வதோடு, தேசத்தின் விடியல்வரை உங்களுக்காக அர்ப்பணிப்போடு உழைப்போம் என்ற எமது உறுதிமொழியை உங்களுக்குச் சொல்லி வைப்பதில் பெருமையடைகின்றோம்" இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## தரைப் பகுதி...

சம்பந்தமாக விரிவான விளக்கங்கள் இல்லை. அண்மைக்கால சம்பவங்களையடுத்து தற்போது அதை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் எமது ஆலோசனைகளை கண்காணிப்புக் குழு எடுத்துச் செல்கிறது. இரு தரப்பு இணக்கப்பாட்டுடன் ஒரு நடைமுறை ஒழுங்கை கொண்டு வருவார்கள் என நம்புகின்றோம்.

யுத்தநிறுத்த காலத்திற்கு முன்னர் எமது கட்டுப்பாட்டு கடற்பிரதேசத்தில் சிறிலங்கா கடற்படை போக்குவரத்தையோ அல்லது எந்தவிதமான அத்துமீறல் செயல்களையோ தவிர்த்து வந்தது. அவர்கள் வரமுடியாத சூழ்நிலை காணப்பட்டது.

தற்போது சமாதான சூழலைப் பயன்படுத்தி எமது கடலாதிக்க பகுதிகளின் உள்ளேயும் ஊடுருவி பல அத்துமீறல்களைச் செய்வது போன்ற விடயங்களை எங்களது கடற்படைத் தளபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் சிறிலங்கா கடற்படை தொடர்ச்சியாக வர்ணகிரண நடவடிக்கையை கிழக்குக் கடலில் மேற்கொண்டு வருகின்றமை ஒரு போர்நிறுத்த மீறல் என்று நாங்கள் கருதுகிறோம். எங்களின் கடலாதிக்கப் பகுதி என நாம் குறிப்பிட்ட பகுதிகளுள் சிறிலங்கா கடற்படை இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறலாகவே நாம் கருதுகின்றோம் எனவும் தெரிவித்ததோடு, இது தொடர்பாக கண்காணிப்புக்குழுவுக்கு சில நடைமுறை ஒழுங்குகளை - எமது தரப்பால் சில ஆலோசனைகளை முன்வைத்திருக்கிறோம் எனவும்

அதாவது எங்களுடைய கடலாதிக்க கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுள் சிறிலங்கா கடற்படை ஊடுருவி ஆத்திரமூட்டும் செயல்களை- யுத்தநிறுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என கண்காணிப்புக்குழுவூடாகவும் நாம் வலியுறுத்தி உள்ளோம் என அரசியல் துறைப் பொறுப்பாளர் கூறினார்.

திருமலையில் போராளிகள் மீது கெடுபிடிகள் இடம்பெறுவது சம்பந்தமாக கேட்கப்பட்ட போது அவர் தெரிவிக்கையில்:

எமது போராளிகள் ஓரிடத்தில் இருந்து இன்னுமோர் இடத்துக்கு போவதற்கான உரியபாதையை நிர்ணயித்துக்கொள்வது அவசியம். போர்நிறுத்த உடன்பாட்டுக்கு முன்னர் எமது போராளிகள் இலகுவாக அப்பாதைகளைப் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. தற்பொழுது அப்பகுதியில் உள்ள இராணுவம் அதற்கு முட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். இது மிகவும் முக்கியமானது. நேற்றையதினம் திருகோணமலையில் திருமலை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பதுமன். கண்காணிப்புக் குழுத் தலைவர் அவர்களுடன் இது சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளார். இது சம்பந்தமாக இரண்டு அல்லது மூன்று நாட்களில் மீண்டும் சந்தித்து ஒரு உடன்பாட்டுக்கு வருவதாக உறுதியளித்துள்ளார் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை.வடபோர்முனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன், ஜோர்ஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சார்பில் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன், கடற்கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (சோ. லோ)

## கடற் பிராந்திய...

கடற் கண்காணிப்புக்குழுத் தலைவர் போல் எரிக். சட்ட ஆலோசகர் மற்றும் மாவட்ட கண்காணிப்புக் குழு அதிகாரி ஆகியோர் கண்காணிப்புக் குழு சார்பிலும்,

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வட போர்முனைத் தளபதி கேணல் தீபன் மற்றும் ஜோர்ஜ் ஆகியோர் விடுதலைப் புலிகளின் சார்பிலும் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்பாட்டில் கடல்சார் செயற்பாடுகள் விரிவான விளக்கங்கள் இல்லாத நிலையிலும் - அண்மைக் காலத்தில் கடற்பரப்பில் விரும்பத்தகாத சம்பவங்கள் சில இடம்பெற்றுள்ள நிலையிலும் கடற்பரப்பிலும் யுத்தநிறுத்தம் தொடர்பான தெளிவான வரையறைகள் தேவையானவையாக உள்ள நிலையிலேயே தற்போதைய பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன

இப்பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகள் யுத்தகாலத்தில் கடற்பிராந்தியத்தில் நிலவிய சூழ்நிலைகளை எடுத்து விளக்கியதோடு, புதிய ஒழுங்கு விதிகள் குறித்து தமது நிலைப்பாட்டினைகளையும், ஆலோசனைகளையும் வழங்கியதாகத் தெரியவருகிறது.

முன்னதாக காலை ஒன்பது மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தை வந்தடைந்த கண்காணிப்புக்குழுவினரை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்கள் வரவேற்று அரசியல்துறை நடுவப் பணியகத்திற்கு அழைத்துச் சென்றார். கலந்துரையாடலையடுத்து கண்காணிப்புக் குழுவினர் பிற்பகல் 1.30 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு திரும்பினர். (சோ, லோ)


சர்வதேச தொலைத்தொடர்பு சேவை

இன்று நண்பகல் 12.00 மணிக்கு

தனது ஒப்பற்ற பணியினை

வட்டக்கச்சி சந்தைக்கு முன்பாக ஆரம்பிக்கின்றது

புதுக்குடியிருப்பிலும் மல்லாவியிலும்

குறைந்த கட்டணத்தில் உரையாடும் நடைமுறையை அறிமுகப்படுத்துகின்றது

(சி - 7829)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.